பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 3 ஞாயிற்றுக்கிழமை 10.04.2022 கதிர் 25

## கரடியனாறு ஈரக்குளத்தில் யானை தாக்கி விவசாயி சாவு

(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு கரடியனாறு ஈரக்குளத்தில் யானை தாக்கி விவசாயி ஒருவர் பலியான சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விதம் பலியானவர் ஐந்து பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் தங்கராசா ☞2

## இன்றும் 19 பேர் தமிழகத்துக்கு




(ந.லோகதயாளன்)

மன்னாரில் இருந்து இன்றும் படகுகள் மூலம் 19 பேர் தமிழகம் சென்றடைந்துள்ளனர்.

இலங்கையில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக தமிழகத்துக்குச் செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இந்தநிலையில், இன்று பயணித்த 8 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேரில் 10 பேர் திருகோணமலை மாவட்டத்தையும், 6 பேர் முல்லைத்தீவு மாவட்டத்தையும், ☞2

## எரிபொருளுக்காக காத்திருந்தவர் லொறியினால் மோதுண்டு சாவு



யாழ்ப்பாணம் அச்சுவேலி பகுதியில் எரிபொருளுக்காகக் காத்திருந்த முதியவர் ஒருவர் லொறியுடன் விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார். ☞2

# ராஜபக்ஷ குடும்ப ஆட்சியைக் கவிழ்த்து நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்போம்




### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சூளுரை

மக்களை அழித்து, நாட்டுக்கு அழிவைக் கொண்டு வந்த ராஜபக்ஷ தலைமுறையையும், ராஜபக்ஷ அரசையும் நிச்சயமாக வீட்டுக்குஅனுப்புவோம்என்றுஎதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். ☞2

## கோட்டாவுக்கு எதிராகக் காலிமுகத்திடலில் தொடரும் மக்கள் தன்னெழுச்சிப் போராட்டம்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷபதவிவிலகவேண்டும் என வலியுறுத்தி கொழும்பு, காலிமுகத்திடலில் இரண்டாவது நாளாகவும் தொடர்ச்சியாகப் போராட்டம் இடம்பெற்று வருகின்றது.

நேற்றுக் காலை பல்கலைக் கழக மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், ☞2



## கோட்டாவுக்கு ஆதரவாகவும் இரு இடங்களில் போராட்டம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து கண்டி மற்றும் தங்காலை நகரங்களில் இன்று போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ☞2

## காதலியை கத்தியால் வெட்டி படுகொலை செய்த காதலன்!

தனது காதலியை, காதலன் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்த பயங்கரம் மெதிரிகிரிய பகுதியில் இன்று இடம்பெற்றுள்ளது.

22 வயதான யுவதியே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரிந்த குறித்த யுவதி அப்பகுதியில் உள்ள வீடொன்றில்காதலனுடன்வசித்துவந்துள்ளார். இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. ☞2

## விலகிச் சென்ற பங்காளிகளை இன்றிரவு சந்திக்கிறார் கோட்டா

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படத் தீர்மானித்துள்ள 40 உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு இன்றிரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்தத் தகவலை ஸ்ரீலங்கா ☞2

## இலங்கையின் நிலை; கனடா ஆழ்ந்த கவலை



இலங்கையில் சீரழிந்து வரும் பொருளாதார நிலை மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியின்மை குறித்து ஆழ்ந்த கவலை அடைவதாக கனடா தெரிவித்துள்ளது. ☞2

## சுற்றுலா சென்றவர்கள் விபத்தில் சிக்கினார்கள்

### ஒருவர் சாவு; இருவர் படுகாயம்

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்குச் சுற்றுலா சென்ற வான், கனரக வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் இருவர் படுகாயம் அடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் கிளபென்போர்க் ☞2

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



## கோட்டாவுக்கு எதிராக.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதகுருமார்கள் உட்படப் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்றுதிரண்டு அரசுக்கு எதிரான போராட்டத்தைக் காலிமுகத்திடலில் ஆரம்பித்திருந்தனர்.

கொட்டும் மழைக்கு மத்தியிலும் ஒன்றுதிரண்ட மக்கள் ஜனாதிபதி செயலகத்தையும் முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் நிறுத்தப்படாது இரவிரவாகத் தொடர்ச்சியாக நடைபெற்ற நிலையில், இன்று இரண்டாவது நாளாகவும் இடம்பெற்று வருகின்றது.

## எரிபொருளுக்காக.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை கனகரட்ணம் (வயது-72) என்ற முதியவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் அச்சுவேலி - தெல்லிப்பழை வீதியில் இடம்பெற்றுள்ளது.

அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசல் நிரப்புவதற்காகச் சென்ற லொறி வரிசையில் நின்று செல்லும் போது, முன்னால் சைக்கிளில் பயணித்த முதியவரை மோதித்தள்ளியது. அதன் போது, முதியவர் லொறியின் சக்கரத்திற்குள் சிக்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் அச்சுவேலி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

லொறிச் சாரதியைக் கைது செய்துள்ள அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமையுடன் லொறியையும் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து சென்றுள்ளனர்.

அதேவேளை கடந்த வாரம் யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவான் பகுதியில் எரிபொருள் நிரப்புவதற்காக வரிசையில் நின்ற தனியார் பஸ் ஒன்றில் பயணித்த பயணி ஒருவர் பஸ்ஸின் கீழ் இறங்கி இருந்த வேளை, பஸ்ஸை சாரதி வரிசையில் முன் நகர்த்திய போது, அதன் சக்கரத்தினுள் சிக்கி உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இன்றும் 19 பேர்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவர் வவுனியா மாவட்டத்தையும், ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்டத்தையும் சேர்ந்தவர்களாவர்.

இந்த 19 பேரில் 7 ஆண்களும், 7 பெண்களும், 5 சிறுவர்களும் அடங்குகின்றனர். 5 சிறுவர்களில் நால்வர் சிறுமிகளாவர்.

## விலகிச் சென்ற.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன வெளியிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

11 கட்சிகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதிக்குக் கடிதமொன்றை அனுப்பினோம். இடைக்கால அரசை அமைக்குமாறு யோசனை முன்வைத்தோம். 20 ஐ நீக்கிவிட்டு திருத்தங்கள் சகிதம் 19 ஐ முன்வைக்குமாறு வலியுறுத்தினோம். இவை தொடர்பில் கலந்துரையாட அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் மைத்திரிபால சிறிசேன மேலும் குறிப்பிட்டார்.

## இலங்கையின்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், அமைதியான முறையில் போராட்டம் நடத்தும் உரிமைக்கு அரசு மதிப்பளிக்கவேண்டும் என கனேடிய வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி தெரிவித்துள்ளார்.

இந்த கடினமான காலத்தில் இலங்கை மக்களோடு கனேடியர்கள் இருப்போம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் தொடரும் போராட்டங்களின் விளைவாக கனடா, அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கான பயண எச்சரிக்கைகளை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ராஜபக்ஷ குடும்ப.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் மாத்திரம் நின்று விடாது வரம்பற்ற நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை முற்றாக இல்லாமல் ஒழிக்கப்படும் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அதனை நிறைவேற்றும் பொருட்டு மக்கள் ஆசியை வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒன்றிணைந்த ஐக்கிய கமத்தொழிலாளர் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்ட விவசாயிகளின் பேரணி நேற்று தெஹியத்தகண்டி நகரில் நடைபெற்றது. இந்தப் பேரணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமை தாங்கியிருந்தார். அப்பகுதி விவசாயிகள் உட்பட ஆயிரக்கணக்கான பொதுமக்களும் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு ஆதரவாகக் கையை உயர்த்தி ஆதரவு தெரிவிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார். இதையடுத்துப் பேரணியில் கலந்துகொண்ட மக்கள் பதிலுக்குக் கைகளை உயர்த்திஅதற்குஆதரவுதெரிவித்தனர்.

ஜனாதிபதி பதவியாக இருக்கட்டும், பிரதமர் பதவியாக இருக்கட்டும், அது ஒரு அமைச்சுப் பதவியாக இருக்கட்டும், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியாக இருக்கட்டும், இவை அனைத்தும் தங்கள் குடும்ப வயிற்றை நிரப்பிக்கொள்வதற்கான தொழிலாக கருதிக்கொள்ளக் கூடாது என்பதை அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நாட்டு மக்களின் நலன் மேம்பாட்டுக்காவே மக்கள் இந்தப் பதவிகளை வழங்குகிறார்கள் என்பதை மனதில்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். சீர்கெட்ட ராஜபக்ஷ ஆட்சியின் முடிவு மிக அருகில் உள்ளது எனக் கூறிய எதிர்க் கட்சித் தலைவர், நாட்டையும் மக்களையும் அழிவுக்கு இட்டுச் சென்ற ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவதற்காக பொதுமக்களும் அணி திரண்டுள்ளனர் எனவும் மேலும் கூறினார்.

## கரடியனாறு ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(வயது -55) எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நபர் பயிர்ச்செய்கை நடவடிக்கையிலும், மாடு வளர்ப்பிலும் ஈடுபட்டு வருபவர். நேற்றுப் பால் கறப்பதற்காகத் தனது மாடுகளைத் தேடிச் சென்றபோது, மறைந்திருந்த யானையொன்று அவரைத் தாக்கியுள்ளது. இதனால் அவர் சம்பவ இடத்திலேயே பலியானார் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்தது. கரடியனாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வேண்டுதலுக் கமைய சம்பவ இடத்திற்குச் சென்ற பிரதேசத்திற்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி எம். எஸ்.எம்.நஸீர் சடலத்தைப் பார்வையிட்டார். சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும் பொருட்டு, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுமாறு பொலிஸாருக்கு அவர் உத்தரவிட்டார்.

## கோட்டாவுக்கு ஆதரவாகவும் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டா வீட்டுக்குப் போ என்று வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் ஜனாதிபதி தலைமையிலான அரசுக்கு எதிராக தன்னெழுச்சிப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இந்தநிலையில், ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து இன்று இரு இடங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. எங்களுக்குக் கோட்டா வேண்டும் எனும் பதாகை ளைத் தாங்கிய வாறு இந்த ஆர்ப்பாட டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

## காதலியைக் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்பின்னரே யுவதியைக் காதலன் கத்தியால் வெட்டிக் கொலை செய்துள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. தலைமறைவான சந்தேகநபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## சுற்றுலா.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலையிலிருந்து கிண்ணியா நோக்கிப் பயணித்த கனரக வாகனமும் கிண்ணியா பிரதேசத்திலிருந்து திருகோணமலை நோக்கி யாழ்ப்பாணத்திலிருந்து சென்றுகொண்டிருந்த வாகனமுமே விபத்துக்குள்ளாகியுள்ளன. இந்த விபத்தில் யாழ்ப்பாணம், கொக்குவில் பகுதியைச் சேர்ந்த ரத்னகலாவதி (வயது 72) என்பவரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய கனரக வாகனத்தின் சாரதியைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622






காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தேவை ஒரு கட்டமைப்பு

நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறிக்குள் சிக்கியிருக்கிறது. இந்த வருடம் ஆரம்பிக்கும்போது நேரடி நெருக்கடிகள் தென்பட தொடங்கும் என்றும், அவை வாரங்கள் கழிய – மாதங்கள் செல்ல – மோசமாகும் என்றும் கடந்த வருட இறுதியிலேயே இப்பகுதியில் பல தடவைகள் சுட்டிக் காட்டி இருந்தோம்.

எதிர்பார்த்தபடி அவை நடக்கின்றன. இது கழுத்தை இறுக்கும் நெருக்குவாரத்தின் ஆரம்பம்தான். இனி மேல் போகப்போக நிலைமை இன்னும் மிக மோசமாகும் என்று கூறப்படுகின்றது.

நிலைமை சீரடைவதற்கான முகாந்திரங்கள் – காரணங்கள் – நியாயங்கள் – சாத்தியங்கள் – இல்லை. அடுத்துவரும் வாரங்களும், மாதங்களும் இருளாகவே தெரிகின்றன. சித்திரைப் புத்தாண்டின் பின்னர் இலங்கை மக்களின் வாழ்வியல் நெருக்கடிகள் மிக மிக மோசமாக இருக்கும் என்பது துலாம்பரமாக தெரிகின்றது.

அவசரத்துக்கு இந்தியா கொடுத்த கடன் உதவி திட்டங்களும், பொருள்களும் விரைந்து, கரைந்து வற்றிப் போக அதற்குப் பின் நிலைமை வெறுமையாக வறண்டு போயிருக்கும் என்று அச்சம் இப்போதே தெரிகின்றது.

நீரேந்தும் பகுதிகளில் சற்று மழை பொழிவதால் மின்விநியோகம் முற்றாகத் தடைப்படாமல் அரைக் கால் நாள்களுக்காவது கிடைக்கும் என நம்ப முடியும்.

ஆனால், அந்நிய செலாவணி அடியோடு கரைந்து போய் விட்டமையால், அத்தியாவசிய உணவுப் பொருள்கள், மருந்துப் பொருள்கள், எரிவாயு, எரிபொருள் தட்டுப்பாடும் பற்றாக்குறையும் எதிர்பார்ப்பதை விட மோசமானதாக பாதிப்பை தரப் போகின்றன.

இந்த நெருக்கடியிலிருந்து நாட்டையும் மக்களையும் மீட்கும் உருப்படியான திட்டமோ, தெளிவான பார்வையோ, அரசியல் சிந்தனையோ தந்திரோபாய வழிமுறைகளோ நம் அரசியல் தலைவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. வழமைபோல அரசியல் செய்து காலத்தை இழுத்தடித்து கொண்டிருக்கிறார்கள் அவர்கள்.

பாமர மக்களின் வாழ்வியல் தவிப்பாக – பல லட்சம் வாய்களினதும் வயிறுகளினதும் பசி, பட்டினி நிலை உணர்வாக வறுத்தெடுக்கும் இப்பிரச்சினைகளை நம் அரசியல்வாதிகள் புரிந்து கொள்ளப் போவதில்லை. தங்களின் பதவிநிலை இலக்குகள், சுயநலங்கள், வாய்ப்பு – வசதிகள் என்ற கண்ணாடியின் ஊடாகவே அப்பாவி பொதுமக்களின் இந்த அபத்த நிலைத் தவிப்பைஅவர்கள்நோக்குவார்கள். நோக்குகின்றார்கள்.

இந்த நெருக்கடியிலிருந்து நாட்டையும் மக்களையும் விடுவிப்பதற்கு இன்று ஒரு சமூகப் புரட்சி தேவை. சமுதாய எழுச்சி அவசியம். இலங்கைத் தீவு ஒன்றுபட்ட நாடாக எழுந்து, தனக்கென புதிய அரசியல் முறைமையை வடிவமைத்து, வெளிப்படுத்துவதற்கான மறுசீரமைப்பு கட்டாயமாகின்றது.

தீர்க்கதரிசனமான பார்வையும், தெளிந்த சிந்தனையும், சுயநலப் போக்கற்ற மக்கள் சேவை மனப்பான்மையும் மிக்க பொது தரப்பினர் மத்தியில் இருந்துதான் இந்த சமூகப் புரட்சி கட்டவிழ வேண்டும்.

அதற்கு இப்போதைய மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் போதுமானவை அல்ல. காத்திரமானவையல்ல.

தேசிய ரீதியாக சுயாதீனமாகக் கட்டமைக்கப்பட்ட ஓர் ஏற்பாடு – ஒழுங்கமைப்பு – அதற்கு அவசியம். மக்கள் ஏற்புடைய ஒரு பொது தலைமைக்குக் கீழ் அதனை விரைந்து கட்டியெழுப்புவது பற்றியும் இன்றைய போராட்டத் தரப்புக்கள் சிந்திக்க வேண்டும்.

# ஈஸ்டர் தாக்குதல் சதிகாரர்களால் ஆட்சியை தக்கவைக்க முடியவில்லை

## கொழும்பு பேராயர் சாட்டை

ஈஸ்டர் பயங்கரவாத தாக்குதலுக்குக் காரணமான சதிகாரர்கள் யார்? என்பது தற்போது வெளிச்சத்துக்கு வருகின்றது என கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இவ்வாறானசம்பவங்களைமுன்னிறுத்தி அதிகாரத்தைப் பெற்றுக்கொள்பவர்களால் நீண்ட காலம் அதிகாரத்தில் இருக்க முடியாது என்பது நிரூபணமாகிறது என்றும் கொழும்பு பேராயர் சுட்டிக்காட்டினார். தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி கட்டுவாப்பிட்டியில் இடம்பெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

# நேற்றைய போராட்டத்தில் நோன்புதுறந்த முஸ்லிம்கள்

நாட்டில் தற்போது நெருக்கடி நிலை காரணமாக நாடளாவிய ரீதியில் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் நேற்று (சனிக்கிழமை) கொழும்பு காலி முகத்திடலில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டன.

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக நடைபெற்ற இந்த பாரிய போராட்டத்தின் போது, போராட்டத்தில் கலந்து கொண்ட முஸ்லிம் சகோதரர்கள் போராட்டக்களத்தில் நோன்பு துறந்துள்ளனர்.

இது தொடர்பான படங்கள் சமூக வலைத்தளங்களில் அதிகமாகப் பகிரப்பட்டு வருகின்றன.

# ஜனாதிபதி செயலகத்தில் இருந்து திடீரென வரும் புகையால் குழப்பம்

ஜனாதிபதி செயலகத்திற்குள் இருந்து திடீரென புகை வெளியேறுவதாக அங்குள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் இவ்வாறு புகை வெளியேறுவது மக்கள் மத்தியில் பாரியகுழப்பத்தைஏற்படுத்தியுள்ளது.

காலி முகத்திடலில் பெருந்தொகையானமக்கள்ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அங்குள்ளவர்கள் இது தொடர்பான படங்களையும் சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் அரசாங்க தரப்பில் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருக்கலாம் என அங்குள்ளவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.



# தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு புதிய நிர்வாகம் தெரிவாகியது



தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் காணப்பட்ட பல்வேறு சர்ச்சைகளுக்கு முடிவு கட்டி புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழு கூட்டம் நேற்று (சனிக்கிழமை) காலை 11 மணியளவில் யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்ற போதே நிர்வாக தெரிவு மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி கட்சியின் தலைவராகச் சட்டத்தரணி பரமசிவம் ஸ்ரீதரனும் கட்சியின் செயலாளர் நாயகமாக வீ.ஆனந்தசங்கரியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேலும் கட்சியின் மகளிர் பேரவைத் தலைவியாக சூரியமூர்த்தி சூரியபிரதீபா வாசவன் தெரிவுசெய்யப்பட்டார்.

அண்மைக் காலமாகத் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் பல்வேறு சர்ச்சைகள் நிர்வாகங்களில் ஏற்பட்ட குழப்பங்களை அடுத்தே இந்தப் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. கட்சியின் பொதுக்குழுக் கூட்டம் மற்றும் தேசிய மாநாடு என்பவற்றை மிக விரைவில் நடத்தவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# நம்பிக்கையில்லா பிரேரணை வெற்றி பதவி இழந்தார் இம்ரான் கான்

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வந்தன. அந்த பிரேரணையின் மீதான வாக்கெடுப்பு நடைபெறவிருந்த நிலையில், இம்ரான்கானின் பரிந்துரையை ஏற்று, அந்நாட்டு ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்தார்.

ஜனாதிபதியின் உத்தரவை எதிர்த்து அந்நாட்டு உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்குப் பதிவு செய்தது.

இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது செல்லாது என அதிரடியாக உத்தரவு பிறப்பித்தது.

அத்தோடு, நம்பிக்கையில்லா பிரேரணையின் மீதான வாக்கெடுப்பு 9ஆம் திகதி நடத்தப்பட வேண்டும் எனவும் உத்தரவிட்டது.



இதனையடுத்து, காலை 10.30 மணியளவில் நாடாளுமன்றம் கூடியது. எனினும் நம்பிக்கையில்லாத் பிரேரணையின் மீதான வாக்கெடுப்பு நடத்தாமல் சபாநாயகர் தாமதம் செய்து வந்தார்.

இதற்கிடையே, உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுப்படி நள்ளிரவில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்போது யாரும் எதிர்பாராத விதமாக நாடாளுமன்றத்தின் சபாநாயகர் ஆசாத் குவைசர் மற்றும் துணை சபாநாயகர் காசிம் சூரி ஆகியோர் தங்களது பதவிகளை இராஜினாமா செய்தனர்.

இந்நிலையில், எதிர்க்கட்சிகள் இடைக்கால சபாநாயகரை நியமித்து நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்தன. இதில் இம்ரான் கானுக்கு எதிராக 174 உறுப்பினர்கள் வாக்களித்த தையடுத்து, இம்ரான்கான் பதவி நீக்கம் செய்யப்பட்டார். இதைத்தொடர்ந்து, நாடாளுமன்ற வளாகத்தை விட்டு இம்ரான்கான் மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் வெளியேறினர்.

புதிய பிரதமராக பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ஷாபாஸ் ஷெரீப் பதவியேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# யுவானில் ரஷ்யாவுடன் வர்த்தகம் அதிரடி முடிவு எடுத்தது சீனா



ரஷ்யாவிடம் இருந்து மசகு எண்ணெய் வாங்க இந்தியா ரூபாயில் ஒப்பந்தம் செய்துள்ள நிலையில் நிலக்கரி மற்றும் மசகு எண்ணெய் வாங்க சீனாவும் அந்நாட்டின் நாணயமான யுவானில் ஒப்பந்தம் செய்துள்ளது. இதன் மூலம் ஐரோப்பிய நாடுகளின் நிலக்கரி தடையை தகர்க்க ரஷ்யா திட்டமிட்டு வருகிறது.

உக்ரைன் மீதான தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ரஷ்யாவிலிருந்து மசகு எண்ணெய் இறக்குமதிக்கு தடை விதிப்பதாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அறிவித்தார். ரஷ்யாவின் மசகு எண்ணெயை வாங்க அமெரிக்காமற்றும்ஐரோப்பியநாடுகள்மறுத்துள்ளமையால் மலிவு விலையில் மசகு எண்ணெய்யை விற்பனை செய்ய ரஷ்யா முன் வந்துள்ளது. ரஷ்யாவிடம் இருந்து மசகு எண்ணெய் வாங்க இந்தியா நடவடிக்கை எடுத்துள்ளது. முதல்கட்டமாக 30 லட்சம் பீப்பாய்கள் மசகு எண்ணெய் போருக்கு முந்தைய விலையில் ஒரு பீப்பாய்க்கு 35 டொலர்கள் வரை தள்ளுபடியில் முதன்மையான மசகு எண்ணெயை இந்தியாவிற்கு ரஷ்யா விற்பனை செய்கிறது. டொலர் இல்லாமல் ரூபிள்-ரூபா மதிப்பில் பரிவர்த்தனை செய்யவும் ரஷ்யா ஏற்றுக் கொள்வதாக தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் இந்தியாவை போலவே சீனா தனது நாட்டு நாணயமான யுவானில் பணம் செலுத்தி ரஷ்யாவிடம் இருந்து நிலக்கரி மற்றும் மசகு எண்ணெய் வாங்க ஒப்பந்தம் செய்துள்ளது.

பல சீன நிறுவனங்கள் மார்ச் மாதத்தில் ரஷ்ய நிலக்கரியை வாங்க உள்ளூர் நாணயத்தைப் பயன்படுத்த அனுமதி தரப்பட்டுள்ளது. எகு உற்பத்தி மற்றும் மின் நிலையங்களுக்கு தேவையான நிலக்கரி முழுமையாக யுவானில் செலுத்தப்படுகிறது. இந்த ஒப்பந்தங்கள் வழக்கமாக டொலர்களில் செய்யப்பட்டு வந்தன. அமெரிக்க, ஐரோப்பிய தடையால் டொலர்களில் பரிவர்த்தனை செய்ய முடியாத சூழலில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ரஷ்யாவில் ஏற்றப்பட்டுள்ள முதல் நிலக்கரி சரக்கு கப்பல் இந்த மாதம் வரும் என்று சீனாவின் எனர்ஜி இன்பர்மேன் சர்வீஸ் நிறுவனம் உறுதி செய்துள்ளது. அமெரிக்காவும் ஐரோப்பாவும் ரஷ்யாவிற்கு தடை விதித்த பிறகு யுவானில் செலுத்தப்பட்ட முதல் சரக்கு ஏற்றுமதி இதுவாகும்.

அதுபோலவே ரஷ்ய மசகு எண்ணெய் விற்பனையாளர்கள் ஆசியாவின் மிகப்பெரிய பொருளாதாரத்தை கொண்டுள்ள சீனாவின் யுவானில் பணம் செலுத்தி பெற்றுக் கொள்ள ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. யுவானில் வாங்கப்பட்ட மசகு எண்ணெய் மே மாதத்தில் சீன சுத்திகரிப்பு நிறுவனங்களுக்கு வழங்கப்பட வாய்ப்புள்ளது. உலக வர்த்தகத்தில் டொலரின் ஆதிக்கம்நீண்டகாலமாகஇருந்துவருகிறது. இதற்கு மாற்றாக தனது நாணயமான யுவானை வர்த்தக நாணயமாக்கும் முயற்சியில் சீனா ஏற்கனவே ஈடுபட்டு வருகிறது. இப்போது உக்ரைன் - ரஷ்யா மோதலுக்கு பின்பு ஏற்பட்டுள்ள சூழலை சீனா தீவிரமாக பயன்படுத்திக் கொள்ளும் எனத் தெரிகிறது.



# உக்ரைன் சென்று ஜெலன்ஸ்கியை சந்தித்தார் போரிஸ் ஜான்சன்

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் 2வது மாதமாக நீடிக்கிறது. ராணுவ கட்டமைப்புகளை தகர்க்கப் போவதாக கூறி போர்தொடுத்த ரஷ்யா, அடுக்குமாடி குடியிருப்புகள், ஆஸ்பத்திரிகள், அரசு கட்டடங்கள், குண்டு வீச்சு தவிர்ப்பு புகலிடங்கள் என தாக்குதல் வரம்பை நீடித்தது.

ஆனாலும் கூட தலைநகர் கீவ் உள்ளிட்ட முக்கிய நகரங்களை கைப்பற்ற முடிந்து வெற்றி பெறாத நிலையில் தனது கவனத்தை இப்போது கிழக்கு உக்ரைன் மீது திருப்பி உள்ளது. உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆ ரவுக்கரம் நீட்டி வருகின்றன இந்த நிலையில், இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் நேற்று உக்ரைன் தலைநக கீவ் சென்றார்.

கீவ் நகரில் உக்ரைன் அ பர் ஜெலன்ஸ்கியை சந்தித் போரிஸ் ஜான்சன் அவருடன் ஆலோசனை நடத்தினார்.

உக்ரைன் அதிப ஜெலன்ஸ்கியின் உதவியாள இந்த தகவலை தனது பேஸ்பு பக்கத்தில் பகிர்ந்ததோடு இருவரும் சந்தித்துப் பேசியதன் படத்தையும் பதிவி டுள்ளார்.

# தொடரும் தாக்குதல்களால் பாதுகாப்புப் படைகளுக்கு சிறப்பு அதிகாரம் வழங்கியது இஸ்ரேல்

இஸ்ரேலில் தாக்குதல்கள் அதிகரித்து வருவதைத் தடுக்கும் முயற்சியில், இஸ்ரேலியப் பிரதமர் நப்தலி பென்னட், அனைத்து பாதுகாப்புப் படைகளுக்கும் முழு சுதந்திரம் வழங்கியுள்ளார். பாலஸ்தீனியர் ஒருவர் நெரிசலான டெல் அவிவ் பொழுது போக்கு பகுதியில் மூன்று பேரைக் கொன்றமை மற்றும் 16பேர் காயத்திற்கு வழிவகுத்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதுகுறித்து இஸ்ரேலியப் பிரதமர் நப்தலி பென்னட் கூறுகையில், 'இந்தப் போருக்கு வரம்புகள் இல்லை மற்றும் இருக்காது.

பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்காக நாங்கள் இராணுவம், ஷின் பெட் (உள்நாட்டு பாதுகாப்பு நிறுவனம்) மற்றும் அனைத்து



பாதுகாப்புப் படைகளுக்கும் முழு சுதந்திரத்தை வழங்குகிறோம்' என கூறினார். இரவு முழுவதும் தீவிர தேடுதல் நட வடிக்கையின் பின்னர், நெரி சலான மதுபானசாலைகள் மற்றும் உணவ கங்களின் வீதிகளில் துப்பாக்கிச் சூடு நடத்திய பாலஸ்தீனிய துப்பாக்கிதாரியை தாங்கள் சுட்டுக் கொன்றோம் என இஸ்ரேலிய பொலி ஸார் தெரிவித்தனர். துப்பாக்கிச் சூட்டில் காயம டைந்த 35 வயதான பாரக் லுபான், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என டெல் அவிவ் மருத்துவமனை வெள்ளிக்கிழமை அறிவித்தது.

வியாழக்கிழமை நடந்த துப்பாக்கிச் சூட்டில் இறந்த மற்ற இருவரும் இரண்டு பேர் 28வயதான டோமர் மொராட் மற்றும் 27 வயதான எய்டம் மாகினி என அடையாளம் காணப்பட்டுள்ளனர். பழைய நகரமான யாபா 1948ஆம் ஆண்டு, இனரீதியாக சுத்திகரிக்கப்பட்டு இன்று சிறுபான்மை பாலஸ்தீனியர்களின் தாயகமாக உள்ளது.

# ஹிந்தி திணிப்பை ஒருபோதும் அனுமதிக்க முடியாது கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் உறுதி



மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 23 ஆவது தேசிய மாநாடு கேரள மாநிலம் கண்ணனூரில் நடைபெற்றது. தேசிய அளவில் பா.ஜ.கவின் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக முன்னெடுப்புகளை மேற்கொள்ளும் வகையில் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் அழைப்பு விடுத்திருந்தனர். அதை ஏற்று தி.மு.க. தலைவரும் தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் கண்ணூர் மாநாட்டில் பங்கேற்றிருந்தார்.

இந்த மாநாட்டில் உரையாற்றிய கேரள முதலமைச்சர் பினராயி விஜயன், பா.ஜ.கவின் ஹிந்தித் திணிப்பை ஒருபோதும் அனுமதிக்க முடியாது, என்று உறுதிபடக் கூறினார். இந்தியாவின் முக்கிய எதிர்பார்ப்பு மையமாக தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திகழ்கிறார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக, தேசிய அளவில் காங்கிரஸ் உடன் கூட்டணி இல்லை என்றும் மாநிலங்களில் அரசியல் சூழ்நிலையின் அடிப்படையில் கூட்டணி குறித்து முடிவெடுக்க மாநிலத் தலைமையை அனுமதிப்பது என்றும் கண்ணூர் மார்க்சிஸ்ட் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் ஆரம்ப உரை நிகழ்த்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, பா.ஜ.கவுக்கு சவால் தரக் கூடிய மதச்சார்பற்ற கூட்டணி அமைக்க அழைப்பு விடுத்தார். மதச்சார்பின்மை குறித்த தனது நிலைப்பாட்டை காங்கிரஸ் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

## மாநிலங்களை அதிக அதிகாரம் கொண்டவையாக மாற்றுவதற்கு முதலமைச்சர் ஸ்டாலின் வலியுறுத்து

மாநிலங்களைபழிவாங்குவதாகநினைத்து மத்திய அரசு மக்களை பழிவாங்குகிறது என்று கேரளாவில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் பேசிய தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கேரளமாநிலம்கண்ணனூரில்நடைபெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 23 ஆவது தேசிய மாநாட்டில் பங்கேற்ற தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மத்திய - மாநில அரசுகளுக்கிடையிலான உறவுகள் எனும் தலைப்பில் உரையாற்றினார்.

மாநில உரிமைகளைக் காப்பதில் சிங்கம் போல் கேரள முதல்வர் பினராயி விஜயன் செயல்படுகிறார். எனக்கு வழிகாட்டும் முதல்வராக அவர் திகழ்கிறார். சிறந்த மாநில ஆட்சிக்கு எடுத்துக்காட்டாக திகழ்பவர். மத்திய அரசைப் பற்றிக் கவலைப்படாமல் சிறப்பாக ஆட்சி நடத்துபவர்.

இந்தியாவைக் காப்பாற்ற வேண்டுமெனில் முதலில் மாநிலங்கள் காப்பாற்றப்பட வேண்டும். மாநிலங்களைப் பழிவாங்குவதாக நினைத்து மத்திய அரசு மக்களைப் பழிவாங்குகிறது. ஒரே நாடு-ஒரே தேர்தல்-ஒரே மொழி என மாற்ற அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

ஆளுநர்கள் ஜனநாயகத்திற்கு எதிராக செயல்படுகின்றனர். ஆளுநரை வைத்து



மாநிலங்களை ஆட்சி செய்ய நினைப்பது முறையல்ல. வேற்றுமைகள் அனைத்தையும் அழித்து ஒற்றைத்தன்மையை உருவாக்க முயற்சிக்கிறார்கள். ஆங்கிலேயர் ஆட்சியில் கூட ஒற்றைத் தன்மை அதிகாரங்கள் இருக்கவில்லை.

மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் கொண்டவையாக இந்திய அரசியல் அமைப்பை மாற்ற வேண்டும், என்று தனது உரையில் மு.க.ஸ்டாலின் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய மாணவர் கனடாவில் சுட்டுக்கொலை



கனடாவில் கல்வி கற்று வந்த இந்தியாவைச் சேர்ந்த கார்த்திக் வாசுதேவ் என்ற 21 வயது மாணவர், டொரன்டோவில் உள்ள ரயில் நிலையத்துக்குச் சென்றபோது மர்மநபர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் மரணமடைந்துள்ளார்.

இந்தச்சம்பவம் இந்தியாவிலும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக டொரன்டோபொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இந்தத் துயர நிகழ்வு குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், இந்திய மாணவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தால் வருத்தம் அடைந்துள்ளோம். அவரது குடும்பத்துக்கு அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம், என்று டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

## தமிழகத்தில் ரொக்கெட் ஏவுதளம் அமைப்பு இஸ்ரோவின் முன்னாள் தலைவர் தெரிவிப்பு



இந்தியாவில் இருந்து விண்ணுக்கு மனிதனை அனுப்பும் ரொக்கெட் சோதனை நடந்து வருவதாக இஸ்ரோவின் முன்னாள் தலைவரும் விக்ரம் சாராபாய் விண்வெளி ஆராய்ச்சி மைய சிறப்புப் பேராசிரியருமான சிவன் தெரிவித்திருக்கிறார்.

விண்ணுக்கு மனிதனை அனுப்ப 3 முக்கிய தகுதிச் சோதனைகள் நடத்தப்பட வேண்டும். இதில் பாதுகாப்பை முக்கியமாக எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த ரொக்கெட்டில் மனிதர் பயணிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

ரொக்கெட்டில் மனிதனை விண்ணுக்கு அனுப்புவதற்குத் தேவையான சோதனைகள் நடைபெற்றுவருகின்றன. இதற்கான சோதனைகள் அனைத்தும் இந்த ஆண்டுக்குள் முடிவடையும். விரைவில் விண்ணுக்குமனிதனைஅனுப்பும் முயற்சி நடைபெறும்.

விண்ணுக்கு மனிதனை அனுப்ப ஜி.எஸ்.எல்.வி. மார்க் 3 ரொக்கெட்டை பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக பல்வேறு சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. தரைத்தள சோதனை, விண்ணில் ஏவும் சோதனை போன்றவையும் நடத்தப்பட விருக்கின்றன.

முதல் கட்டமாக இரண்டு ரோபோக்கள் ரொக்கெட்டில் வைத்து அனுப்பப்படும். அந்த சோதனை வெற்றிகரமாக முடிந்த பின் மூன்றாவதாக மனிதரை அனுப்பும் முயற்சி நடைபெறும், என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

குலசேகரப்பட்டினத்தில் ரொக்கெட் ஏவுதளம் அமைப்பதற்கு தமிழக அரசு மிகவும் ஆர்வமாக உள்ளது.

இந்த ஏவுதளம் அமைப்பதற்கு 2,300 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. இதில் 50 சதவீத நிலங்களை தமிழக அரசு ஏற்கனவே ஒப்படைத்துள்ளது. எஞ்சிய நிலங்கள் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நிலம் முழுமையாகக் கிடைத்தவுடன் ரொக்கெட் ஏவுதளத்துக்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகும். மீண்டும் மீண்டும் பயன் படுத்தக்கூடிய ரொக்கெட்டுக்களை வடிவமைப்பதற்கான சோதனைகள் தொடர்ந்து நடத்தப்பட்டுவருகின்றன, என்றும் பேராசிரியர் சிவன் குறிப்பிட்டிருக்கிறார்.

## வரி அதிகரிப்புச் செய்த மாநிலங்களுக்கு மத்திய அரசு நிதியுதவியை வழங்கியது என்கிறார் நேரு



தமிழகநகர்ப்புறநிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, திருச்சி பஞ்சப்பூரில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமையும் பகுதியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதன் பின்னர் அவர் ஊடகவியலாளர்களைச் சந்தித்திருந்தார். அப்போது அவரிடம் வரி உயர்வுகள் பற்றி கேள்வி யெழுப்பப்பட்டது.

அந்தக் கேள்விகளுக்கு, 1987 இல் அ.தி.மு.க. ஆட்சியில் கிராமப்புறங்களில் 100 சதவீதம் நகரங்களில் 200 சதவீதம் தொழிற்சாலைகளுக்கு 30[illegible] சதவீதம் வரிகள் அதிகரிக்கப்பட்டன. மீண்டும் 1993 இல் அவர்களின் ஆட்சியில் 100,150, 250 சதவீத வரிகள் உயர்த்தப்பட்டன. ஆனால் 1998 இல் தி.மு.க. ஆட்சியில் 50,75,125 என்ற வீதத்திலே வரிகள் அதிகரிக்கப்பட்டன.

இப்போது, கோவையில் 60[illegible] சதுரஅடி வீட்டுக்கு 2,000 ரூபா என்ற அளவில் வரிவிதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பூனாவில் 6,000 தொடக்கம் 7,000 வரை வரி செலுத்த வேண்டும். மத்திய அரசிடம் இருந்து நமக்கு ஏழாயிரத்து 600 கோடி ரூபா நிதி பாக்கி வர வேண்டியுள்ளது.

நடப்பு ஆண்டில் 15 ஆயிரம் கோடி ரூபா அவர்கள் த[illegible] வேண்டும். மத்திய அரசின் நிதியைப் பெறுவதற்கு, அவர்களது நிபந்தனைக்கேற்ப ஏற்கனவே வரிகளை உயர்த்தி பிற மாநிலங்கள் தகுதிபெற்றுவிட்டன. இந்தியாவின் பிற மாநிலங்களோடு ஒப்பிடும்போது தமிழகத்தில் குறைவாகவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் கே.என்.நேரு பதிலளித்திருக்கிறார்.

# கஞ்சா கடத்திய இரண்டு பேர் பெரியநீலாவணையில் கைது!







(பாறுக் ஷிஹான்)

மோட்டார்சைக்கிளில் 2 கிலோ கேரளா கஞ்சாவைக் கடத்திய குற்றச்சாட்டில் இரண்டு சந்தேக நபர்களை பெரியநீலாவணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதமுனை கடற்கரைப்பகுதியில் நேற்று சனிக்கிழமை மாலை காத்தான்குடி பகுதிக்கு கேரள கஞ்சா கடத்தப்படவுள்ளதாக களுவாஞ்சிக்குடி விஷேட அதிரடிப்படைக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய பொலிஸாருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பின் போதே இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிள்மற்றும் 13,500 ரூபா பணமும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் சம்மாந்துறை இஸ்மாயீல்புரம், வளாத்தப்பிட்டி எனும் முகவரியைச் சேர்ந்த 40 வயதுடையவரும், பீச் றோட், பெரிய நீலாவணை, மருதமுனைப் பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடைய நபருமாவர்.

சான்றுப் பொருள்களைப் பொறுப்பேற்ற பெரிய நீலாவணை பொலிஸார் சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.







# கல்முனை கிறிஸ்தவர்கள் கவனவீர்ப்புப் போராட்டம்

(பாறுக் ஷிஹான்)

மின்சாரத் தடை மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு, அத்தியாவசிய பொருள்களின் விலை ஏற்றம் போன்றவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தை கல்முனை திரு இருதயநாதர் ஆலயத்தின் முன்னால் கல்முனை வாழ் கிறிஸ்தவ மக்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆராதனையின் பின்னர் முன்னெடுத்தனர்.

இப்போராட்டம் கல்முனை திரு இருதயநாதர் ஆலய பங்குத்தந்தை அருளானந்தன் தேவதாஸன் தலைமையில் காலை இடம்பெற்றது. சுமார் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டு எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பினர்.

இதன்போது போராட்டக்காரர்கள் 'நிர்வாகத்தைச் சரியாக செய்யுங்கள்!" 'மக்கள் உணர்வுகளை புரிந்து கொள்ளுங்கள்!', 'வினை விதைத்தவன் வினையறுப்பான்', 'குடும்ப ஆட்சி வேண்டாம்; மக்கள் ஆட்சியே வேண்டும்', 'காலால் உதைக்காதீர்கள்; கைகொடுக்கும் தெய்வமாக மாறுங்கள்!', 'மக்கள் சேவை மகேசன் சேவை என அறிந்து கொள்ளுங்கள்!' என அரசுக்கு எதிராகப் பல்வேறு சுலோகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு கோஷங்களை எழுப்பியபடி போராட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# உள்ளூராட்சி உறுப்பினர்கள் நால்வர் புதிதாகப் பதவியேற்பு



மட்டக்களப்பு மாநகர சபையின் உறுப்பினரொருவர், ஏறாவூர் நகர சபையின் பிரதித் தவிசாளர் மற்றும் ஓர் உறுப்பினர், இன்னும் ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச சபையின் ஒரு உறுப்பினர் உட்பட பதவி வெற்றிடமான நால்வரின் இடத்திற்கு புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என மட்டக்களப்பு, மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் எம். பி. எம். சுப்யான் தெரிவித்துள்ளார்.

புதிய உறுப்பினர்களின் பதவியேற்பு வைபவம் நேற்று சனிக்கிழமை ஏறாவூர் நகர சபை மண்டபத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சருமான எம்.எஸ். சுபைர் தலைமையில் இடம் பெற்றது.

புதிய உறுப்பினர்கள் நால்வரினதும் பெயர்கள் 2022ஆம் ஆண்டு ஏப்ரலில் 06ஆம் திகதி வெளியான வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் ஏறாவூர் நகர சபையின் உறுப்பினராகவும் அச்சபையின் பிரதித் தவிசாளராகவும் செயற்பட்ட மீராலெப்பே ரெபுபாசத்தின் உறுப்பினர் பதவிக்குப் பதிலாக மீராஸாஹிபு அப்துல் கபூர் மற்றும் உறுப்பினரான அலியார் பாத்திமா பஜிகாவிற்குப் பதிலாக அப்துல் மஜீத் சப்ராவும், ஏறாவூர்ப்பற்று பிரதேச சபையின் ஐயங்கேணி முஸ்லிம் வட்டார உறுப்பினரான எம். எஸ். முஹம்மது ஜவ்பர் என்பவரின் வெற்றிடத்துக்கு அலியார் றஹமா பீபீயும் நியமிக்கப்பட்டுள்ளனர். மேற்படி பழைய உறுப்பினர்கள் மூவரையும் கட்சி உறுப்புரிமையில் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நீக்கியதால் அவர்கள் உள்ளூராட்சிமன்றங்களில் வகித்த உறுப்பினர் பதவியை இழந்தனர்.

இதேவேளை மட்டக்களப்பு மாநகர சபையின் 16ஆம் இலக்க மஞ்சந்தொடுவாய் வட்டார உறுப்பினர் முஹம்மட் உசனார் முஹம்மட் நிப்லார் என்பவர் அனுமதிபெறாது தொடர்ச்சியாக மூன்று சபைக் கூட்டங்களுக்குச் சமுகமளிக் காத காரணத்தினால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு அப்துல் காதர் முஹம்மட் லத்தீப் நியமிக்கப்பட்டுள்ளார் என்று மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் சுப்யான் அறிவித்துள்ளார்.

புதிய உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண பதவியேற்பு வைபவத்தில் ஏறாவூர் நகர சபைத் தலைவர் எம்.எஸ். நளிம், செயலாளர் எம்.எச்.எம். ஹமீம் மற்றும் அலுவலர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.



# சாய்ந்தமருதில் தொடர்ந்தும் அரச எதிர்ப்புப் போராட்டம்!

அரசாங்கத்திற்கும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கும் எதிராக நாட்டின் பல்வேறு இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில் அம்பாறை மாவட்ட சாய்ந்தமருது பிரதேசத்தில் இரண்டாவது நாளாக நேற்று இரவும் தேசிய கொடியை ஏந்திக்கொண்டு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

பிரதான வீதிகளில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும் திரளான இளைஞர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு 'GO HOME GOTA', 'வீட்டுக்கும் கேடு, நாட்டுக்கும் கேடு, கோட்டா நீ அமெரிக்காவுக்கே ஓடு!', 'பச்சிளம் குழந்தைகளைக் கொன்ற கோட்டாவே வெளியேறு!', 'மொட்டின் முட்டுக்களே கழருங்கள்!', 'அடுத்து நாட்டை விட்டு வெளியேறப் போவது யார்?', 'ஆட்சி செய்து கிழித்தது போதும்', 'குடும்ப ஆட்சி வேரோடு ஒழிக!', 'பெற்றோல் இல்லை; டீசல் இல்லை; கோட்டாவுக்கு அறிவும் இல்லை!', "கோட்டா சேர்! தயவு செய்து போங்க சேர்!', 'வெந்தது நாடு; கோட்டாவத் தூக்கி வெளியில் போடு!', 'பொருளாதார நெருக்கடி இரவெல்லாம் கொசுக்கடி', 'பஸிலே வெளியேறு!' போன்ற கோஷசங்களையிட்டவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசலில் இருந்து ஆரம்பித்து மாளிகா சந்திவரை சென்ற ஆர்ப்பாட்ட பேரணி காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

அதனை கட்டுப்படுத்தும் வேலைகளை பொலிஸார் மேற்கொண்டிருந்ததனர்.

# தமிழர்களுக்கு மாத்திரமல்ல அனைவருக்கும் உதவுங்கள்!



## தமிழக முதல்வரிடம் கூட்டமைப்பு வேண்டுகோள்

நாட்டுமக்கள் அனைவரும் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் அதேவேளை, அனைவரும் ஒன்றிணைந்து தமது உரிமைகளுக்காகப் போராடிவரும் சூழ்நிலையில் தமிழ்மக்களுக்கு மாத்திரம் உதவிகளை வழங்குவது இனங்களுக்கு இடையில் பிளவுகளை ஏற்படுத்திவிடும்.

ஆகவே ஒட்டுமொத்த இலங்கையர்களுக்கும் உதவிகளை வழங்க முன்வரவேண்டும் என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

தற்போது நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், இலங்கைவாழ் தமிழ்மக்களுக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்கான முன்மொழிவைத் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிடம் முன்வைத்திருந்தார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சருடன் கடந்த வியாழக்கிழமை 07.04.2022 தொலைபேசி மூலம் உரையாடிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தூத்துக்குடியின் ஊடாக கப்பல் மூலம் இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகவாழ் தமிழ் மக்களுக்கு அவசியமான உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப்பொருள்களை வழங்குவதற்கு அவசியமான தயார்ப்படுத்தல்களை தமிழக அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

அந்தப் பொருள்களை விநியோகிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய இராஜதந்திர அலுவலகங்கள் ஊடாக முன்னெடுக்குமாறும் அவர் வெளியுறவுத்துறை அமைச்சரிடம் வேண்டுகோள்விடுத்தார்.

இருப்பினும் இதற்கு சமூக வலைத்தளங்களில் எதிர்ப்பை வெளியிட்டுவரும் இலங்கைவாழ் தமிழ் மக்கள், தற்போது இலங்கையர்கள் அனைவரும் பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் சூழ்நிலையில் தமக்கு (தமிழ்மக்களுக்கு) மாத்திரம் உதவிகளை வழங்குவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது என்று தெரிவித்துள்ளனர்.

அதுமாத்திரமன்றி அரசாங்கத்தின் அராஜக செயற்பாடுகளுக்கு எதிராக எவ்வித இன, மத, கட்சி பேதமுமின்றி சிங்கள, தமிழ், முஸ்லிம், கத்தோலிக்க மக்கள் அனைவரும் வீதிகளில் இறங்கிப் போராடி வருகின்றார்கள்.

அவ்வாறிருக்கையில் வடக்கு, கிழக்கிலும் மலையகத்திலும் வாழும் தமிழ்மக்களுக்கு மாத்திரம் உதவிகளை வழங்குவது, மீண்டும் இனரீதியான பிளவுகள் ஏற்படுவதற்கு வழிவகுக்கும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே இது தொடர்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான அரசியல் கட்சியான தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் தமிழ்மக்களுக்கு அவசியமான உதவிகளை வழங்கமுன்வந்த தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு முதலில் நன்றி கூறுகின்றோம். ஆனால் தற்போது இலங்கையில் வாழும் அனைத்து மக்களும் உணவுப்பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கியிருக்கின்றார்கள். அதுமாத்திரமன்றி சிங்களமக்கள் தமிழ் மக்களிடம் மன்னிப்புக்கோரும் நிலை உருவாகியிருப்பதுடன், அனைவரும் ஒன்றிணைந்து தமது உரிமைகளுக்காகப் போராடுகின்றார்கள். எனவே இவ்வாறானதொரு சுமுகமான சூழ்நிலை உருவாகி வரும்போது, தமிழ்மக்களுக்கு மாத்திரம் உதவிகளை வழங்குவது இனங்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்திவிடும். ஆகவே நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்கும் உதவிகளை வழங்குமாறு அவரிடம் வேண்டுகோள்விடுக்கின்றேன். – என்றார்.

## பெண் கழுத்து நெரித்து கொலை தலவாக்கலையில் பெரும் பயங்கரம்

தலவாக்கலை, வடகொட பிரதேசத்தில் வீடொன்றில் பெண்ணொருவர் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

84 வயதுடைய வயோதிப பெண் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

பெண் வீட்டில் தனிமையில் இருந்த போது துணியினால் கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டு அவர் அணிந்திருந்த காதணிகளை கொள்ளையடித்துவிட்டு தப்பிச் சென்றுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். பிரேத பரிசோதனை நேற்று (சனிக்கிழமை) நடைபெற்றதுடன், தலவாக் கலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




## வவுனியா சதொசவில் மக்கள் நீண்ட வரிசை!

வவுனியா சதொசவில் பொருள்களை வாங்க வந்த மக்கள் நீண்ட நேரமாக வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை நேற்று (சனிக்கிழமை) ஏற்பட்டிருந்தது.

சதொசவில் 1,950 ரூபா பெறுமதியில் அரிசி, சீனி, பால்மா பக்கெற், தேயிலைப்பக்கெற் போன்ற பொருள்கள் வழங்கப்படுகின்றன என மக்களுக்குக் கிடைத்த தகவலை அடுத்து நேற்று காலை முதல் மக்கள் வரிசை ஏற்பட்டிருந்து .

இந்நிலையில் சுமார் 100 பேர் வரையில் வயோதிபர்கள், கைக்குழந்தைகளுடன் தாய்மார் என பலரும் காத்திருந்த நிலையில் பொருள்கள் வழங்குவதற்கு தமது கணனியில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டுள்ளதாகவும் பொருள்களை வழங்க முடியாதுள்ளதாகவும் ஊழியர்களால் தெரிவிக்கப்பட்டது. இதனால் காத்திருந்த மக்கள் முரண்படத் தொடங்கிய நிலையில் பொலிஸார் வருகை தந்து பொருள்களை வழங்குவதற்கு ஆவண செய்யுமாறு சதொச ஊழியர்களுடன் கலந்துரையாடியிருந்தனர்.

## லொறியின் மீது கொள்கலன் கவிழ்ந்து கோரமாக விபத்து



வீதியில் பயணித்த கொள்கலன் பாரவூர்தியின் கொள்கலன் எதிர்த் திசையில் வந்த லொறியின் மீது கவிழ்ந்து விபத்துக்கு உள்ளாகி உள்ளது.

கொழும்பு–கண்டி வீதியின் மாவனல்லை மஹந்தேகம சந்திக்கு அருகில் நேற்று (சனிக்கிழமை) காலை இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த லொறியின் சாரதி மாவனல்லை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கெலிஓய பிரதேசத்தில் வசிக்கும் 59 வயதுடையவர் என அடையாளம் காணப் பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் கொள்கலன் பாரவூர்தியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

## நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவது நெருக்கடிக்கு தீர்வாகாது!

### இப்படிக் கூறுகின்றார் எஸ்.பி.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதன் மூலம் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியாது என எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் படும் இன்னல்களுக்கு அரசாங்கம் என்ற ரீதியில் வருந்துகிறேன் என கூறிய அவர், மக்களின் குறைகளை உணர்ந்து அரசாங்கம் செயற்படுவதாகவும் தெரிவித்தார். பொதுஜன பெரமுன அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகசந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மை தொடர்பாக எவ்வித பிரச்சினையும் ஏற்படவில்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.04.2022இல் வெளியிடப்பெற்றது.